உ

கணபதி துணை.

திருப்பெருந்துறைப்புராணம்.

திருக்கைலாயபரம்பரைத்
திருவாவடுதுறையாதீனத்து
மஹாவித்துவானாகிய
திரிசிரபுரம்
ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்
இயற்றியது.

இது
மேற்படி ஆதீனத்து
ஸ்ரீலஸ்ரீ
அம்பலவாணதேசிகரவர்கள்
ஆஜ்ஞையின்படி
திருவிடைமருதூர்க்கட்டளை
ஸ்ரீ காசிநாததம்பிரானவர்கள்செய்த
பொருளுதவியைக்கொண்டு
இந்நூலாசிரியர் மாணாக்கரும்
கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய
உத்தமதானபுரம்
வே. சாமிநாதையரால்
பரிசோதித்து,

சென்னை:
வெ. நா. ஜுபிலி அச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது.

1892.

துதிம ணம்புரி தோகையொ டெம்பரன்
கதிகொண் மால்விடை யேறிக் கயிலையுற்
றதிக மாம்வினை யாட்டின மர்ந்தனன்
பதியு மன்பர் துதித்துப் பரவவே. (சங)

அம்மை யோகநன் காற்றிய பீடத்தின்
வெம்மை தீர்சிறப் போதினம் வேந்தனே
யெம்மை யாளிறை யேவவி னலடை
செம்மை வீரன் றிறமும் விளம்புவாம். (சச)

யோகபீடச்சிறப்புரைத்தபடலமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் கூ0எ.

வீ ர ப த் தி ர ப் ப ட ல ம்.

யாவரும் புகழ்சி வானு பவமெவ்வா றிருக்கு மென்னின்
மேவரு முருவொன் றற்றப் பெருந்துறைக் கோயின் மேவித்
தாவரும் பூசை யோடு சாறுங்கொண் டடைந்தோர்க் கெல்லா
மோவருஞ் சோறு நல்கி யுவந்தவீற் றிருக்கு மன்றே. (க)

சிறவிதி யென்பான் செய்த திமகச் சாலை யெய்தி
மறவறு முமையாள் சிறித் திருவுரு மறைத்த பின்னர்த்
தெறவலிக் குறுத்தாட் பூதச் சேனையோ னெற்றி நாப்ப
ணுறவிழி திறந்தா னங்கின் றுதித்தனன் வீர னென்பான். (உ)

சடைமுடி யண்டத் துச்சி தடவரப் புயங்தி காந்த
முடைபட் டெருங்கக் கண்க ளுலப்பரும் புலிங்கங் கொட்ட
மிடைபுகைப் படலம் வாயின் வெளிப்படப் பிறையுந் தஞ்சென்
றடைதரு மெயிறு தோன்ற வாரழற் சுவாலை வீங்க. (ங)

பலகைவா ளவரம் வைவேல் பரசெழுக் கணிச்சி சூல
மிலகுசக் கரந்த ரோண மங்குசம் பாச மின்னுங்
குலவுவன் றண்டந் திண்டோ மரமுதற் குலவ வேந்திக்
கலகமொன் றறத்து மிக்குங் கைபல பொலியா நிற்க. (ச)

கொண்டமே னியிலுண் டாய குறவியர்ப் பிடைச்ச னித்த
புண்டவா வெயிற்றுப் பேழ்வாய்ப் பூதவே தாளக் கூட்ட
மண்டரு கலெக்க வோரெண் ணுயிர கோடி சூழத்
தொண்டர்தம் பெருமான் முன்பு தொழுதெழுந் திதனைச் சொல்வான். (ரு)

எருடேல் குடிக்கோ மேரு வரைபெயர்த் தெடுத்து மற்றை
முழுவரை யெலாந்து ளாக மோதுபு முடிக்கோ மாலைச்
செழுமல ரோனைக் கையாற் பிசைந்துபொட் டிடுகோ செந்தீ
யொழுகவெங் கணும்வி ழிக்கோ வுறுதரா கவிழ்த்தல் செய்கோ. (சு)

திசைக்கடாக் களிற்றை யொன்றச் சேர்த்துவால் பிடித்த டிக்கோ
முசைக்குமண் டங்க ளாய முழுதுங்கைக் கொண்டு பந்தி
னுசைக்குமோ ராடல் செய்கோ பற்பல வுரைப்ப தென்றீ
நகைக்கெலா முணவு செய்கோ வருளென நவின்று நின்றான். (எ)

மோகமார் மூடத் தக்கன் முதலியாரு நமக்கு நல்கும்
பாகமின் றென்று கூறிப் பண்ணுவான் மகமன் னுன்பா
லேகிநீ பாக முண்டோ வில்லையோ வெனக்கே டைய
ஞகிய வவன்ம றுக்கி லடர்த்துவா வென்று ரைனயன். (அ)

இடுபணி யிதுதா னேவென் றெயிறெலா மிலங்க நக்குக்
கொடுவலிப் பூதஞ் சூழக் குறுகினன் யாக சாலை
விடுதல்செய் யாம னன்கு வாயிலுங் காவன் மேவத்
தொடுகழற் காலான் வைத்துத் துண்ணென வுட்புக் கானல். (கூ)

வீரனுட் புகுத லோடும் வெம்புலிப் போத்துக் கண்டு
சோருமான் குழாங்க ளென்னத் துண்ணென நடுங்கி வீழ்ந்தா
ரியாருமற் றனைய வேலை யழிதகைத் தக்கன் முன்போ
யோருமெம் பெருமான் பாக முண்டுகொ லில்லைகொ லென்றான். (௧0)

இலையென மொழியா னுண்டென் றியம்பிடா னிருப்ப வன்னான்
றலையற வாளால் வெட்டித் தழல்படு குண்டத் திட்டு
நிலைகுலைந் தோடு மெச்சன் றலையையு நேரே வெட்டி
யலைபுரிந் தனன்மற் றுள்ள வமரர்கள் பலரு மாய. (௧௧)

சிறுவிதி மனைவி முன்னுச் செறிந்தபன் மாதர் தம்பாற்
குறுகுபு முன்போ யம்மை கோபத்தில் வருபெண் டெய்வ
நறுவிரைக் குழல்வார் காது நாசிவன் முலைமுன் னுகச்
செறுவலி கொண்டு கொய்து தெறுசின மொழித்த தன்றே. (௧உ)

கொடுவலிச் சுழலுஞ் செங்கட் குறியதாட் பூத மெல்லாங்
கடுகிமற் றமர மாதர் கலையரா யறகெ கிழ்த்துப்
படுமுலைக் குவடு பற்றித் தழீஇத்தழீஇப் பருகி வாய்நீர்
விடுதலற் றிருந்த காம விடாய்தவிர்த் திருந்த வன்றே. (௧௩)

உடையநெய்க் குடம னைத்து முருட்டுபு பொரியைச் சிந்தி
மிடைதரக் குவித்த வோம விறகெலா மொன்று செய்து
புடைமகக் குழியி னிட்டு நீரனீர் புகட்டிப் போக்கி
நடைமழச் சிறபூ தஞ்செய் குறும்பினை நவில்வா ரியாரே. (௧௪)